DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.180/2022 | Deposition of Witness for : PW3 |
| Name : மாரியப்பன் | Father/Husband Name : கருப்பன் |
| Age : 54 | Village : மாணிக்கவாசகபுரம் |
| Taluk : ஏரல் | Calling : பள்ளி காவலாளி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15 July 2025
Accused absent. Petition U/s. 317 Cr.P.C filed and allowed..

**முதல் விசாரணை :–**

1. நான் நாசரேத் மாணிக்கவாசகபுரத்தில் குடியிருந்து மூக்குபீறி மாற்கு பள்ளியில் காவலாளியாக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும், எனது உறவினர் ஆவார். எதிரியை தெரியும். எங்கள் ஊரைச் சேர்ந்தவர். கடந்த 05.11.2021 ம் தேதி மாலை 5.15 மணியளவில் அ.சா.1 ன் மருமகன் இசக்கிமுத்து டியூப்லைட்டை கோவிலுக்கு அருகே கட்டியிருந்தார். அப்போது அங்கு வந்த எதிரி மூர்த்தி சிரியல் லைட் மற்றும் டியூப் லைட்களை உடைத்து விட்டார். உடனே அ.சா.1 செல்வி எதிரியிடம் ஏன் டியூப் லைட்டை உடைக்கிறீர்கள் என்று கேட்டார்.

2. அதற்கு எதிரி அ.சா.1 ஐ பார்த்து தேவடியா மவளே, புண்டாமாவளே என்று ஆபாசமாக பேசி, அவரை அறைந்து, டியூப் லைட்டை எடுத்து அ.சா.1 ன் தலையில் அடித்து கீழே தள்ளி விட்டார். பின்பு நாங்கள் விலக்கி விட்டோம். பின்பு 6.30 மணியளவில் அ.சா.1 அரவது வீட்டில் இருந்தபோது அங்கு வந்த எதிரி தேவடியா மவளே, புண்டாமாவளே என்று ஆபாசமாக பேசி, அ.சா.1 ன் செவிட்டில் அடித்து, கீழே தள்ளிவிட்டு அ.சா.1 ன் நெஞ்சில் மிதித்தார். இச்சம்பவத்தை பார்த்து நானும், அ.சா.2 முருகன் என்பவரும் சத்தம் போட்டு விலக்கி விட்டோம். சம்பவ நேரத்தில் எதிரி மது அருந்தியிருந்தார். காயம்பட்ட அ.சா.1 செல்வி நாசரேத் லூக்கா மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைப் பெற்றுவிட்டு, பின்பு மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றார். நாங்கள் உடன் சென்றோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.07.15 19:41:23 +0530

Judicial Magistrate, Sathankulam.